**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI

C.C. No : 280/2019

Depositions of witness for Prosecution

PW : 3

பெயர் : ரங்கசாமி

த/பெ : கருப்புசாமி

தேதி : 19.04.2022 நேரம் 04.01 – 04.15.

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை**

காரைக்குடி மெஸ்ஸிற்கு கிழபுறத்தில் எனக்கு 2 சென்ட் பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த காரைக்குடி மெஸ் வைத்திந்த பழனிச்சாமி, திவ்யா ஆகியோரைஎத்தனை நாட்களாக தெரியுமா என்றால் இந்த பிரச்சனைக்கு முன்பாக 6 மாதங்களாக தெரியும். காரைக்குடி மெஸ் இருந்த இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கண்ணுக்குட்டி என்கிற பெரியசாமிகக்கு பாத்தியப்பட்டது அவரை எத்தனை நாட்காளக தெரியும் என்றால் சிறுவயது முதலே தெரியும். வழக்கு சம்பவ சமயத்தில் ஆடு, மாடு மேய்துகொண்டிருந்தேன். காரைக்குடி மெஸ் 10 க்கு 10 விஸ்தீரணம் இருக்குமா என்றால் இல்லை 2 சென்ட் இருக்கும். அங்கு சமையல் அறை குளியல் அறை மற்றும் 2 அடிஅகலத்தல் ஒரு சந்து உள்ளது என்றால் ஆமாம். அந்த காரைக்குடி மெஸ்ஸின் கழிவு நீர் பின்னால் உள்ள காலி இடத்திற்குபோகும் என்றால் இல்லை கடைக்கு முன்னால் போய்விடும். எதிரிகள் என்ன கடை வைத்துள்ளார்கள் என்றால் முருகபவன் மெஸ். அவர்கள் யாருடைய இடத்தில் வைத்துள்ளார்கள் என்றால் அப்புசாமி இடத்தில்.நான் தினமும் காரைக்குடி மெஸ்க்கு சாப்பிடபோவேனா என்றால் போவேன். முருகபவன் மெஸ்க்கும் காரைக்குடி மெஸ்க்கும் இடையே கடை நடத்துவது சம்பந்தமாகவும் கழிவு நீர் வெளியேற்றுவது சம்பந்தமாகவும் பிரச்சனை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் கடைக்குள் சாப்பிட்டு கொண்டிருந்தபோது பிரச்சனை ஏதேனும நடந்ததா என்றால் கடைக்குள் பிரச்சனை இல்லை. நான் எவ்வளவு நேரம் சாப்பிட்டேன் என்றால் 5 நிமிடம். நான் சண்டையை விலக்கிவிடவில்லை என்றால் நான் சண்டைபோடாதிர்கள் என்று விலக்கிவிட்டேன். நான் சொல்வதை யாரும் கேட்கவில்லை என்பதால் நான் அங்கிருந்து போய்விட்டேன் என்றால் இல்லை அங்கேயே ஒரு மணி நேரம் இருந்தேன். நான் சாப்பிடும்போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 4 பேர் இருந்தார்கள். நான் தற்போது சொன்ன விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காரைக்குடி மெஸ்ஸில் இருந்து வெளியேரும் கழிவு நீர் ஒரு மாதமாக தேங்கிநின்றது என்றும் அதை கேட்கபோனதற்கு அவர்கள் தான் எதிரிகளை அடித்துகாயப்படுத்தினார்கள் என்றும் அதற்காக வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இடத்தின் உரிமையாளர் பெரியசாமி சொன்னதின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 08.07.2019 ம் தேதி கடைக்கு செல்லவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

C.C. No : 280/2019

Depositions of witness for Prosecution

PW : 4

பெயர் : பெரியசாமி
த/பெ : முத்துசாமி
தேதி : 19.04.2022 நேரம் 04.16 – 04.34.

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை**

எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நடத்தி வந்த காரைக்குடி மெஸ்ன் மொத்த இட விஸ்தீரனம் எவ்வளவுஎன்றால் 2 சென்ட். அந்த கடையின் சாப்பிடக்கூடிய இடம் 10க்கு 10 இருக்குமா என்றால் 16க்கு 17 இருக்கும். அதுபோக ஒரு கிச்சன் உள்ளது என்றால் ஆமாம். கிச்சனுக்கு பின்னால் பாத்ரூம் உள்ளது. அந்த இடத்தில் ஷட்டர் மட்டும் தான் உள்ளது என்றும் கேட் இல்லை என்றும் சொன்னால் சரிதான். அந்த இடத்திற்கு கிழபுறத்தில் 2 சென்ட் தள்ளி வடபுறமாக அப்புசாமிக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த 2 ஏக்கர் பூமியில் 50 சென்ட் விஸ்தீரணத்தில் எதிரிகள் கடை நடத்தி வருகிறார்கள் என்றால் கடை நடத்திவருகிறார்கள் ஆனால் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியாது. அசா.1.2 செங்கப்பள்ளியில் வாடகைக்கு குடியிருந்த விலாசம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு குழந்தை. அந்த காரைக்குடி மெஸ்ஸில் குடியிருப்புக்காக தனியாக அறை எதுவும் இல்லை என்றால் சரிதான் ஆனால் அவர்கள் அதிலேயே வசித்தார்கள். அந்த காரைக்குடி மெஸ்சை சுற்றி கம்பிவேலி இருந்தது என்றால் அப்போது இல்லை.அந்த காரைக்குடி மெஸ்க்கு கிழபுறத்திலும், மேபுறத்திலும் காலியிடமாகதான் இருந்தது என்றால் ஆமாம். அந்த பின்னால் உள்ள பாத்ரூம் எத்தனை அடி உயரம் இருக்கும் என்றால் 8, 9 அடி இருக்கும். அது சிமெண்ட் சீட் போட்டு ஒரு பக்கமாக இறக்கிவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு இரும்பு கதவு உள்ளது என்றால் சரிதான். அதில் 8 அடி உயரத்தல் ஜன்னல் உள்ளது என்றால் 5 அடி உயரத்தில் உள்ளது. அந்த காரைக்குடி மெஸ்ஸில் குடியிருப்பதற்கே வாய்ப்பில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 9 அடி உயரத்தில் இருக்கும் பாத்ரூமில் 8 அடி உயரத்தில் இரும்பு கதவும் 8 அடி உயரத்தில் ஜன்னலும் உள்ளது என்றும், அதை சுற்றியும் காலி இடமாக இருக்கிறது என்றும் அதனால் அங்கு யாரும் பார்க்க இயலாது என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் இல்லை. எதிரிகள் நடத்திவரும் மெஸ்சும் வாதி நடத்தி வரும் மெஸ்சும் ஒரேவகையாக சைவம் மற்றும் அசைவம் உணவகம் என்று சொன்னால் எதிரிகள் நடத்திவரும் மெஸ்ஸை பற்றி தெரியாது. எதிரிகள் மெஸ்க்கும் புகார்தாரர் மெஸ்க்கும் தொழில் ரீதியாகவும் கழிவு நீர் தேங்கி நிற்பது சம்பந்தமாகவும் முன்விரோம் இருந்து வந்தது என்றுசொன்னால் அதுபோல் இல்லை. நான் கடைக்குள் இருக்கும்போது இவ்வழக்கில் சொல்லியுள்ள அடிதடி பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை கடைக்கு வெளியில் வந்தபோது தான் நடந்தது. வாதிகள் நடத்தி வரும் மெஸ்ஸில் இருந்து கழிவு நீர் வெளியே தேங்கி நிற்பதை எதிரிகள் கேட்டபோது வாதிகள் தான் எதிரிகளை அடித்து காயப்படுத்தினார்கள் அதனால் எதிரிகள் தான் அவர்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2வது எதிரி அந்த சம்பத்தில் காயமடைந்து பெருந்துறை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. வாதிகள் எந்த மருத்துவமனைக்கு போனார்கள் யார் அழைத்து சென்றது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவரது கணவர் தான் அழைத்து சென்றால் ஊத்துக்குளி அரசுமருத்துவமனைக்கு. நான் சொல்வதுபோல் சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

C.C. No : 280/2019

Depositions of witness for Prosecution

PW : 5

பெயர் : பழனிச்சாமி
த/பெ : நாச்சிமுத்து
தேதி : 19.04.2022 நேரம் 04.35– 4.40

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை**

பெரியசாமி எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் சிறிய வயது முதலிலே தெரியும். நான் எப்போது கரைக்குடி மெஸ்க்கு சென்றேன் என்றால் அன்றைய தினம் இரவு சென்றேன் நான் சென்ற போது கடையில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் கடையில் யாரும் இல்லை கடை பூட்டி இருந்தது. வேறு எங்கு போனேன் என்றால் பக்கத்து கடைக்கு போனேன். எத்தனை போலிசார் இருந்தார்கள் எத்தனை பொதுமக்கள் இருந்தார்கள் என்றால் பொதுமக்கள் யாரும் இல்லை போலிசார் மட்டும் 5,6 பேர் இருந்தார்கள். நான் செல்வதற்கு முன்பாக போலிசார் யார் யாரை விசாரித்தானர் என்ன என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் ஆமாம், மொத்தம் எத்தனை கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் 2 கையெழுத்து. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்ன விபரம் என்றால் தெரியாது. நான் 2 சாட்சி கையெழுத்து செய்த பின்னிட்டு சாப்பிட போய்விட்டேன் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் செல்லவில்லை என்று பெரியசாமி கேட்டு கொண்டுதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

C.C. No : 280/2019

Depositions of witness for Prosecution

PW : 6

பெயர் : வெள்ளியங்கிரி

த/பெ : சுப்பிரமணியன்

தேதி : 19.04.2022 நேரம் 04.45–

**மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பிளாமிங் காண்டிரக்ட் வேலை செய்கிறேன். எத்தனை மணிக்கு வேலை போவேன் என்றால் காலை 8 மணிக்கு சென்று விட்டு இரவு 8.00 மணிக்கு வருவேன். நான் குடியிருக்கும் அண்ணாநகருக்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் ஒரு கிலோ மீட்டர் இருக்கும். பெரியசாமியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 10 வருடங்களாக தெரியும். காரைக்குடி மெஸ்ஸிக்கு எத்தனை மணிக்கு சாப்பிட மணிக்கு போனேன் என்றால் 08.07.2018 தேதியன்று இரவு 8.00 மணிக்கு போனேன். நான் சென்ற போது கடையில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் கடை பூட்டி இருந்தது. அங்கு எத்தனை பொதுமக்கள் இருந்தார்கள் எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் 2 போலிசார் இருந்தார்கள் பொதுமக்கள் யாரும் இல்லை. நான் செல்வதற்கு முன்பு போலிசார் யார் யாரை விசாரித்தார்கள் என்ன என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் கேட்டுகொண்டதற்கிணகங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். மொத்தம் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் 2 கையெழுத்து. நான் கைப்பட எழுதி வைத்ததிருந்த பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். அதில் என்ன எழுதி இருந்தது என்று நேரடியாக எனக்கு தெரியும் என்றால் இல்லை. நான் கையெழுத்து செய்து விட்டு வெறு பக்கம் சாப்பிட போய் விட்டேன் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சொன்னவிதத்தில் சொன்னநேரத்தில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும் பெரியசாமி கேட்டுக்கொண்டதற்காக கையெழுத்து செய்துவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.